**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 07-ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் ஆனி திங்கள் 23-ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 29/2019**

*(CNR No. TNSV07-000606-2019)*

மு. முத்தையா, (54/2018)
த/பெ. RM.முத்தையா,
கதவு எண். 18, V.PR.M தெரு,
முத்தாத்தாள் பள்ளி எதிரில்,
தேவகோட்டை.
(இ) 11E2, நீலமேக நகர்,
ஒசூர்- 635019.

**....குற்றமுறையீட்டாளர்/புகார்தாரர்**

/எதிராக/

மு. இராமநாதன் (50/2018)
த/பெ. RM.முத்தையா,
கதவு எண். 18, V.PR.M தெரு,
முத்தாத்தாள் பள்ளி எதிரில்,
தேவகோட்டை.

**.....எதிரி**

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின்

சுருக்கம்

<table>
<tr><th>வ.எண்</th><th>விளக்கம்</th><th colspan="2">விபரங்கள்</th></tr>
<tr><td>1.</td><td>குற்றமுறையிடுபவர்</td><td colspan="2">மு. முத்தையா, (54/2018)<br>த/பெ. RM.முத்தையா,<br>கதவு எண். 18, V.PR.M தெரு,<br>முத்தாத்தாள் பள்ளி எதிரில்,<br>தேவகோட்டை.</td></tr>
<tr><td>2.</td><td>எதிரி</td><td colspan="2">மு. இராமநாதன் (50/2018)<br>த/பெ. RM.முத்தையா,<br>கதவு எண். 18, V.PR.M தெரு,<br>முத்தாத்தாள் பள்ளி எதிரில்,<br>தேவகோட்டை.</td></tr>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுகள்</td><td colspan="2">இதச பிரிவுகள் 324, 506(2)ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>4.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="2">06/03/2015</td></tr>
<tr><td>5.</td><td>தனி புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="2">04/12/2018</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td>இல்லை</td><td rowspan="2">முன்பிணை பெற்ற நாள்: இல்லை</td></tr>
<tr><td>பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>7.</td><td>கு.வி.மு.ச பிரிவு 246-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="2">21/04/2026</td></tr>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல்</td><td colspan="2">-----</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3"></td></tr>
<tr><td rowspan="4">10.</td><td rowspan="4">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>ம.சா.1</td><td>05/04/2022</td><td>07/08/2025</td></tr>
<tr><td>ம.சா.2</td><td>08/10/2025,<br>06/11/2025</td><td>06/11/2025</td></tr>
<tr><td>ம.சா.3</td><td>27/02/2026</td><td>27/02/2026</td></tr>
<tr><td>11.</td><td>எதிரிகளிடம் குற்றம் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">26/05/2026</td></tr>
<tr><td rowspan="2">12.</td><td rowspan="2">எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td>பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td colspan="2">------</td><td>-----</td></tr>
<tr><td>13.</td><td>வழக்கு விசாரணை தொடங்கிய நாள்</td><td colspan="3">05/04/2022</td></tr>
<tr><td>14.</td><td>வழக்கு விசாரணை முடிந்த நாள்</td><td colspan="3">18/06/2026</td></tr>
<tr><td>15.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">07/07/2026</td></tr>
<tr><td>16.</td><td>தீர்வு</td><td colspan="3">முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 506(2)-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை மேற்படி குற்றச்சாட்டைப் பொறுத்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | **தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி இதச பிரிவு 323ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து எதிரிக்கு இதச பிரிவு 323-ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.1,000/- அபராதம் விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், கு.வி.மு.ச பிரிவு 248(2)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.** |

இந்த தனி புகாரானது கடந்த 04.12.2018 அன்று தாக்கல் செய்யப்பட்டு 12 ரிஜிஸ்டர் எண்.7977/2018 ல் பிறப்பிக்கப்பட்ட 16.04.2019-ம் தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்தில் CC.No.29/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ராம்ஜி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி. மீனாட்சி சுந்தரம், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், எதிரி தரப்பு வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வமான வாதவுரை பரிசீலிக்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும்

இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**<u>தீர்ப்புரை</u>**

1. இவ்வழக்கு எதிரி மீது குற்றமுறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 156(3)ன் கீழான மனுவானது 190 உ/இ பிரிவு 200-ன்கீழான தனி புகாராக புலன்கொள்ளப்பட்டு எழுந்த வழக்காகும்.

**<u>2. தனிபுகாரின் சுருக்கம்:-</u>**

(2.1) குற்றமுறையீட்டாளர், குற்றமுறையீட்டாளரின் சகோதரர் மாணிக்கம் ஆகியோர்கள் குற்றமுறையீட்டாளரின் பூர்விக வீட்டை அவரது சகோதரான எதிரி இராமநாதன் என்பவர் சுமார் 10 மாதங்களாக வீட்டை பூட்டி வைத்துக் கொண்டு சாவி தர மறுத்து வந்ததாலும், ஊர் பெரியவர்கள் பங்காளிகள் பேசியும். சாவியை ஒப்படைக்காமல் இழுத்து கொண்டே வந்தார். இந்நிலையில் கடந்த 06.03.2015 ம் தேதி மாலை 6.00 மணியளவில் குற்றமுறையீட்டாளர் தங்களது குல தெய்வ படைப்பிற்காக பூர்வீக வீட்டிற்குள் செல்லும் போது வாசல் முற்றத்தில் இருந்த எதிரி இராமநாதன் என்பவர் அவரது நண்பர்களிடம் குற்றமுறையீட்டாளர் பற்றியும், அரவது மாணிக்கத்தையும் பற்றியும் இன்னொரு தம்பியுமான அசிங்சமாகவும் ஆபாசமாகவும், பேச ஆரம்பித்துள்ளார். எதிரி குடிபோதையில் இருந்ததால் குற்றமுறையீட்டாளர் கண்டு கொள்ளமால் சென்று விட்டார். ஆனால் எதிரி குற்றமுறையிட்டாளரை

பார்த்து தேவடியா பயலே என உனக்கு வெட்கம் மானம் இருக்கா? என அசிங்கமாக பேசி அருகில் இருந்த மண்வெட்டி கணையால் இடது மண்டையில் பலமாக தாக்கியுள்ளார் அதில் படுகாயமடைந்த குற்றமுறையீட்டாளர் ஏன் இப்படி பண்ணீகிறாய் எதிரியிடம் கேட்டதற்கு போட சுன்னிதயோழி நாயே நீ எல்லாம் என் முன்னாடி நின்னு பேசுகிற அளவுக்கு தைரியம் வந்துவிட்டதா என கூறி கொண்டு தன் கையில் வைத்திருந்த வீட்டு சாவியாலும் மீண்டும் தாக்கியதில் மண்டை பிளந்து ரத்தம் வர ஆரம்பித்துவிட்டது.

(2.2) அத்துடன் குற்றமுறையீட்டாளரிடம் எதிரி தனது பண பலத்தாலும், அரசியல் பலத்தாலும், தன்னை ஒன்றும் செய்ய முடியாது எனவும், இதற்கு மேல் ஏதாவது கேட்டால் குற்றமுறையீட்டாளரையும், குற்றமுறையீட்டாளரின் குடும்பத்தையும் புல், பூண்டு கூட இல்லாமல் அழித்து விடுவதாகவும் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். எதிரி ESSAR Travels என்னும் தேவகோட்டை to கோயம்புத்தூர் வரை தனியார் சொகுசு பேருந்து வைத்து பெரிய அளவில் தொழில் புரிவதால் அதிக அளவில் பணம் பலம் மற்றும் அரசியல் பலம் கொண்டவர்.

(2.3) குற்றமுறையீட்டாளர் தனது மண்டை உடைந்த உடன் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டு பின்பு தேவகோட்டை நகர் காவல்நிலையத்திற்கு சென்று கடந்த 06.03.2015 ம் தேதி இரவு 9 மணியளவில் அடுத்தநாளான கைப்பட புகார் மனு தனது வழங்கப்பட்டுள்ளது. 07.03.2015 தேதிய புகார் அளித்துள்ளார். குற்றமுறையீட்டாளர் மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கும்

போது கைபேசி மூலம் காயத்துடன் புகைபடம் எடுத்துள்ளார். குற்றமுறையீட்டாளர் கொடுத்திருந்த புகார் மனு மீது விசாரணை செய்யமால் 20 நாட்கள் கழிந்த பிறகு எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து வீட்டு சாவியை குற்றமுறையீட்டாளர் மற்றும் அவரது தம்பி மாணிக்கம் ஆகியோர்களிடம் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தன் பேரில் ஷை மனுவின் வாபஸ் வாங்க நிர்பந்தம் கொடுத்துள்ளார்கள். ஆனால் குற்றமுறையீட்டாளர் தான் கொடுத்த புகார் மனுவை விசாரணை செய்ய கூறியும் எதிரி மீது வழக்கு பதிவு செய்ய கூறியும் பலமுறை காவல் நிலையத்திற்கு சென்று கேட்டுக் கொண்டதற்கு இதுவரையில் தேவகோட்டை நகர் காவல் நிலையத்தினர் எதிரி மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலும், வழக்கு பதிவு செய்யாமலும் காலம் கடத்தி வருகின்றனர் இது சம்பந்தமாக 15.03.2015 கண்காணிப்பாளர் அவர்களுக்கு 06.03.2015ம் தேதியன்று தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் கொடுத்துள்ள புகார் மனுவை பற்றிய புகார் ஒன்றை அனுப்பியுள்ளார். நகர் காவல்நிலையத்தில் புகார்தாரரின் மனுவினை விசாரணை செய்கின்றோம் எனக்கூறி கடந்த 3 வருடங்களாக மனுதாரரை அழைக்கழித்து எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காததால் ஷை தகவல்களை எல்லாம் கூறி கடந்த 25.10.2018ம் தேதி சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு மீண்டும் புகார் மனுவை பதிவு தபாலில் அனுப்பியும் இன்றுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து ஷை வழக்கின் குற்றமுறையீட்டாளரால் கடந்த 06.03.2015ம் தேதியன்று தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் எதிரி மீது கொடுத்த புகார்

மனுவின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச பிரிவு 294(b), 324, 506(II) ஆகிய பிரிவுகளின் கீழ் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தேவகோட்டை நகர் காவல் நிலையத்திற்கு உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இந்த தனி புகாரானது குற்றமுறையிடுபவரால் குவிமுச பிரிவு 156(3) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக் கோரும் மனுவாக தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது குவிமுச பிரிவு 200 ன் கீழான தனிபுகாராக 12 ரிஜிஸ்டர் எண்.7977/2018 ல் பிறப்பிக்கப்பட்ட 16.04.2019-ம் தேதியிட்ட உத்தரவின்படி எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) ன் கீழ் இந்நீதிமன்றத்தில் CC.No.29/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டு மனுநகலுடன் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ளது.

<u>4. குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியங்கள்</u> :

பின்னர் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகிய பின்பு புகார்தாரரின் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு புகார்தாரர் தரப்பில் ம.சா.1 முதல் ம.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. மனுதாரர் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் மனுதாரர் தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) ம.சா.1 முத்தையா தனது சாட்சியத்தில் தான் தேவகோட்டையில் வசிக்கிறேன் என்றும் ஆஜர் எதிரி தனது சகோதரர் ஆவார் என்றும் ஆஜர் எதிரி 06.03.2015 ம் தேதி தேவகோட்டையில் உள்ள தங்களது மூதாதையர் வீட்டை பூட்டி வைத்துக்கொண்டு திறக்கமாட்டேன் என்று சொன்னார் என்றும் மாலை 6.00 மணிக்கு ஆஜர் எதிரியிடம் ஏன் வீட்டை பூட்டி வைத்திருக்கிறாய் என்று கேட்டேன் என்றும் அவர் சாவி மற்றும் மண்வெட்டியை வைத்து அடித்துவிட்டார் என்றும் எதிரியிடம் கேட்டதற்கு உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் உன்னிடம் பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிவிட்டார் இதற்குமேல் பிரச்சனை எதாவது செய்தால் குடும்பத்தோடு அழித்துவிடுவேன் என்று சொன்னார் என்றும் அதன்பிறகு தனது பணப்பலத்திற்கு முன்னால் உன்னால் எதுவும் செய்யமுடியாது என்று சொன்னார் ஏன் பூட்டினாய் என்று காரணத்தை கேட்டதற்கு உனக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று சொன்னார் என்றும் எதிரி அடித்ததில் தனக்கு தலையின் இடது பக்கம் காயம் ஏற்பட்டது என்றும் அதன்பின்பு தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி பெற்றுக்கொண்டேன் அரசு மருத்துவமனையில் வைத்து என்னுடன் இருந்த நண்பர் தன்னை போட்டோ எடுத்தார் என்றும் அந்த போட்டோ மற்றும் சிடியை தான் தாக்கல் செய்துள்ளேன் அது புதசாஆ 1 ஆகும் என்றும் முதலுதவி சிகிச்சை முடிந்த பிறகு தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும் தான் கொடுத்த புகார் மனு நகல் புதசாஆ 2 ஆகும் என்றும் தான் கொடுத்த புகார் மனுவுக்கு போலிசார் கொடுத்த புகார் மனு ரசீது நகல் புதசாஆ 3 ஆகும் என்றும்

போலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அதனால் மாவட்ட கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினேன் என்றும் அந்த புகார் மனு நகல் புதசாஆ 4 ஆகும் என்றும் திரும்பவும் எஸ்பி ஆபிசிற்கு புகார் மனு பதிவு தபால் மூலம் அனுப்பினேன் அந்த புகார் மனு நகல் புதசாஆ 5 ஆகும் அதனை மாவட்ட கண்காணிப்பாளர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ரமீது புதசாஆ 6 ஆகும் அஞ்சல் அட்டை புதசாஆ 7 ஆகும் என்றும் தான் கொடுத்த புகாருக்கு போலிசார் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மனுப்படி உத்தரவாக கோரப்படுகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) ம.சா.2 சாமிநாதன் தனது சாட்சியத்தில் .கடந்த 06.03.2015-ம் தேதி புகார்தாரரின் வீட்டிற்கு தான் எதேச்சையாக சென்றிருந்தேன் என்றும் தான் வீட்டிற்குள் போகும்போது புகார்தாரருக்கும் அவருடைய தம்பிக்கும் இடையே சாவி தொடர்பாக தகராறு நடந்து கொண்டிருந்தது என்றும் அப்போது எதிரி மண்வெட்டிக் கணையால் அவருடைய அண்ணனான புகார்தாரரை அடிக்கப் போனார் என்றும் அப்போது தானும், வெள்ளையன் மகன் ராமநாதனும், வீரப்பன் மகன் ராஜீ என்ற விணைதீர்த்தான் விலக்கிவிட்டோம் என்றும் விலக்கி எதிரியை கொண்டு வந்து வாசல் அருகே விட்டுவிட்டு வந்தோம் என்றும் அப்போது முத்தையா நடுவாசலில் முற்றத்தில் நின்று கொண்டிருந்தார் என்றும் மீண்டும் எதிரி வந்து சாவியால் புகார்தாரரை உச்சந்தலையில் அடித்து விட்டார் என்றும் அதில் அவருக்கு தலையில் இரத்தக் காயம் ஏற்பட்டது என்றும் பிறகு காவல் நிலையம் சென்றோம். காவல்

நிலையத்தில் முதலில் முதலுதவி பெற்று வாருங்கள் என்று சொன்னார்கள் என்றும் பிறகு மருத்துவமனைக்கு சென்றோம் என்றும் அங்கு தையல் போட்டார்கள் என்றும் புகார்தாரர் முத்தையாவுக்கு சம்பவத்தில் காயம்பட்டதற்கு முதலுதவி செய்ய அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றும் அங்கு வைத்து முத்தையாவை காயங்களுடன் நான்தான் தன்னுடைய சாம்சங் போனில் போட்டோ எடுத்தேன் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் தான் எடுத்தது தான் (மேற்படி புகைப்படம் குறுந்தகடு மற்றும் பிரிவு 65B சான்றிதழுடன் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் ம.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) ம.சா.3 மாணிக்கம் தனது சாட்சியத்தில் தான் காரைக்குடியில் வசித்து வருகிறேன் தனக்கு சொந்த ஊர் தேவகோட்டை. கடந்த 06.03.2015 ம் தேதி தேவகோட்டையில் உள்ள தங்கள் வீட்டிற்கு எதிரில் உள்ள குலதெய்வம் கோவிலான முத்தாத்தாள் சாமி கோவிலுக்கு படைப்பு வைப்பதற்காக மாலை 5.00-5.30 மணியளவில் சென்றிருந்தேன் என்றும் சாமி குப்பிட்டுவிட்டு வீட்டிற்குள் சென்றபோது வீட்டில் பின்பக்கம் பலாப்பழம் மரம் அருகில் சென்றுவிட்டேன் அங்கு போய்விட்டு திரும்ப வரும்போது புகார்தாரர் முத்தையாவும் எதிரி ராமநாதனும் தங்களுடைய பொது வீட்டின் சாவியை ராமநாதன் வைத்துக்கொண்டு பிரச்சனை செய்தது சம்பந்தமாக இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது இருவருக்கும் இடையில் கைகலப்பு ஆனது என்றும் முத்தையா கீழே நின்று கொண்டிருந்தார்

ராமநாதன் வளவு முற்றத்தில் பட்டியக்கல்லில் நின்று கொண்டிருந்தார் என்றும் மேலே நின்றிருந்த ராமநாதன் சாவியை கொடுக்க மாட்டேன் என்று கையில் இருந்த சாவியால் ராமநாதன் முத்தையாவை தலையில் அடித்துவிட்டார் என்றும் பிறகு தானும் தன் மாப்பிள்ளை சாமிநாதனும் முத்தையாவை தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றும் அரசு மருத்துவமனையில் வைத்து சாமிநாதன் அவருடைய செல்போனில் முத்தையா ரத்தத்துடன் இருப்பதை புகைப்படம் எடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சிய விசாரணை நிறைவுற்ற பின்னர் சாட்சியங்களின் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் எதிரி இந்நீதிமன்றத்தால் விசாரிக்கக்கூடிய குற்றத்தை புரிந்திருப்பதாக அனுமானிக்க போதிய காரணங்கள் இருப்பதாக இந்நிதிமன்றம் கருதியதால் எதிரி மீது இதச பிரிவு 324, 506(2)-ன்கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரிக்கு வாசித்து விளக்கி கூறி வினவிய போது எதிரி தான் குற்றவாளி அல்ல என மறுத்தார். மேலும் தமது தரப்பில் மனுதாரர் தரப்பு சாட்சிகள் யாரையும் மீண்டும் குறுக்கு விசாரணை செய்யவேண்டியதில்லை என்று தெரிவித்தார். எனவே குற்றமுறையீட்டாளர் தரப்பு கூடுதல் சாட்சிய விசாரணைக்கு வாய்ப்பளிக்கப்பட்டு குற்றமுறையீட்டாளர் தரப்பில் செய்யப்பட்ட மேலெழுத்தின் அடிப்படையில் குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டது.

7. இந்நிலையில் எதிரிக்குப் பாதகமாக தோன்றும் குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியங்கள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b) படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வ வாதுரை பரிசீலிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், குற்றமுறையீட்டாளர் தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**10. தீர்வு**

(10.1) கடந்த 06/03/2015 ம் தேதி மாலை 6.00 மணியளவில் தங்களுடைய குடும்ப வீட்டில் வைத்து எதிரி மண்வெட்டி கணையாலும், சாவியாலும் தாக்கி அசிங்கமாக பேசி கொலைமிரட்டல் விடுத்தார் என்பதே மனுவில் கண்டபடி புகார்தாரர் தரப்பு வழக்கு ஆகும்.

(10.2) இவ்வழக்கில் எதிரி மீது இதச பிரிவுகள் 324 மற்றும் 506(2)ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 முதல் 3 வரையிலானவர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். ம.சா.1 அவருடைய முதல் விசாரணை

சாட்சியத்தில் வழக்கை வலியுறுத்தும் விதமாக 06/03/2015 ம் தேதி எதிரி தங்களது மூதாதையர் வீட்டை பூட்டிவைத்து கொண்டு திறக்க மாட்டேன் என்று சொன்னதாகவும் மாலை 6.00 மணிக்கு எதிரியிடம் ஏன் வீட்டை பூட்டி வைத்திருக்கிறாய் என்று கேட்டதாகவும், அவர் சாவி மற்றும் மண்வெட்டியை வைத்து அடித்து விட்டதாகவும் மேலும் இதற்கு மேல் பிரச்சனை செய்தால் குடும்பத்தோடு அழித்துவிடுவேன் என்று மிரட்டியதாகவும் அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிரி அடித்ததில் தனக்கு தலையில் இடது பக்கம் காயம் ஏற்பட்டதாகவும் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி பெற்றுக்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.1ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக ம.சா.2ம் அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரி சாவியால் புகார்தாரரை உச்சந்தலையில் அடித்துவிட்டதாகவும் அதில் அவருக்கு இரத்தகாயம் ஏற்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் ம.சா.3ம் ம.சா.1ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக 06/03/2015 ம் தேதி மாலை 5.00 – 5.30 மணியளவில் சென்றிருந்ததாகவும் சாமி கும்பிட்டுவிட்டு வீட்டிற்குள் சென்றதாகவும் எதிரி இராமநாதனும் புகார்தாரர் முத்தையாவும் பொது வீட்டின் சாவியை ராமநாதன் வைத்துக்கொண்டு கொடுக்காமல் பிரச்சனை செய்தது சம்பந்தமாக இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது இருவருக்கும் இடையில் கைகலப்பு ஆனதாகவும், முத்தையா கீழே நின்று கொண்டிருந்ததாகவும் ராமநாதன் வளைவு முற்றத்தில் பட்டியக்கல்லில் நின்றுகொண்டிருந்ததாகவும் மேலே

நின்றிருந்த ராமநாதன் சாவியை கொடுக்க மாட்டேன் என்று கையில் இருந்த சாவியால் ராமநாதன் முத்தையாவை தலையில் அடித்துவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(10.3) ம.சா.1 எதிரி தன்னை மண்வெட்டியாலும் அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளபோதிலும் மனுதாரர் தரப்பில் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள ம.சா.2, 3 ஆகியோர் அவ்வாறு எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் இவ்வழக்கானது காலவரையால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒரு வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வழக்கானது 16/04/2019 ம் தேதியிட்ட உத்தரவின் படி இதச பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506(2) ஆகிய பிரிவுகளுக்கு கீழான குற்றங்களுக்கு வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ள நிலையில் இதச பிரிவு 506(2) ஆனது 7 ஆண்டுகள் வரையில் தண்டனை வழங்கத்தக்க குற்றமாக உள்ள நிலையில் எதிரிகள் தரப்பில் காலவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்பட்ட வாதமானது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

(10.4) ம.சா.1 தான் மண்வெட்டியால் தாக்கப்பட்டதாக சொல்லும் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் விதமாக ம.சா.2 ,3 ஆகியோரின் சாட்சியம் அமையாதபோதிலும் ம.சா.1 எதிரி தன்னை சாவியால் தாக்கியதாக சொல்லும் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் விதமாக ம.சா.2, 3 ஆகியோரின் சாட்சியம் அமைந்துள்ளது. ம.சா.1 முதல் 3

வரையிலானவர்களின் சாட்சியம் குறுக்கு விசாரணையிலும் தகர்க்கப்படவில்லை. சம்பவமானது 06/03/2015 ல் நடைபெற்றுள்ள நிலையில் மனுதாரர் ம.சா.ஆ.2 புகார் மனுவை காவல்துறையில் அளித்து அதற்கு ம.சா.ஆ.3 மனு ரசீதும் வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே இந்த தனி புகாரை முன்எடுப்பதில் உள்ள 3 வருட தாமதம் மனுதாரரின் வழக்கின்மீது எந்த ஐயத்தையும் ஏற்படுத்துவதாக அமையவில்லை. இந்த வழக்கில் ம.சா.1 தான் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக குறிப்பிடும் நிலையில் அதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் சான்றாவணமாகத் தாக்கல் செய்யப்படவோ சிகிச்சை அளித்த மருத்துவர் விசாரிக்கப்படவோ இல்லை. மனுதாரர் தரப்பில் மனுதாரருக்குக் காயம் ஏற்பட்டதை காண்பிக்கும் விதமாக ம.சா.ஆ.1 (ம.சா.ஆ.8) புகைப்படம் மற்றும் CD ஆகியவற்றை முன்னிலைப்படுத்தப்படுவதாக வழக்கிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி புகைப்படம் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்பதற்கும் சம்பவம் நடைபெற்ற தேதியில்தான் எடுக்கப்பட்டதா என்பதற்கும் மேற்படி புகைப்படத்தில் தேதி குறிப்பு எதுவுமில்லை. மேற்படி புகைப்படம் மற்றும் CD க்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள 65 B சான்றிதழில் அதன் Hash Value குறிப்பிடப்படவும் இல்லை. இருப்பினும் மேற்படி புகைப்படம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் என்றே அனுமானத்திற்காக எடுத்துக் கொண்டாலும் அதில் கண்ட இரத்தக்காயம் வழக்கு சம்பவத்தின் விளைவாகத்தான் ஏற்பட்டது என்பதற்குப் புகைப்படத்தில் தேதி மற்றும் நேர குறிப்புகள் இல்லை. இருந்தபோதிலும் ம.சா.1 முதல் 3 வரையிலானவர்கள் எதிரி புகார்தாரரை சாவியால் தாக்கியதாக ஒருவர்

சாட்சியத்தை மற்றொருர் உறுதிப்படுத்தும் விதமாகச் சாட்சியம் அளித்துள்ள நிலையில் மருத்துவ ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்ற காரணத்திற்காகவே அவர்களின் சாட்சியத்தைப் புறந்தள்ளிவிட முடியாது.

(10.5) ம.சா.1 முதல் 3 வரையிலானவர்களின் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் அவர்களுடைய சாட்சியத்தின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும் வகையில் எந்த சூழ்நிலைகளும் இல்லை. எனவே ம.சா.1 முதல் 3 வரையிலானவர்களின் சாட்சியம் குறுக்கு விசாரணையிலும் தகர்க்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிரி மீது இதச பிரிவு 324ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில் எதிரி தாக்க பயன்படுத்திய ஆயுதமான சாவி இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி சாவியின் அளவுகள் குறித்தோ எடை குறித்தோ எந்தச் சாட்சியமும் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவும் இல்லை. மேலும் ம.சா.1, 2, 3 ஆகியோர் சாவியால் அடித்ததில் ம.சா.1க்கு தலையில் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி சாவி இதச பிரிவு 324க்கு உட்பட்ட கொடிய ஆயுதமா என்பதை பொறுத்து தீர்வுகாண ஏதுவாக மேற்படி சாவியால் தாக்கப்பட்டதின் விளைவாக ஏற்பட்ட காயத்தின் அளவுகள் மற்றும் தன்மை குறித்து எந்த மருத்துவ ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏற்கனவே கண்டுள்ளது போல் ம.சா.1தான் மண்வெட்டியால் தாக்கப்பட்டதாகச்சொல்லியுள்ள போதிலும் அதனை உறுதிப்படுத்தும் விதமாக ம.சா.2, 3 ஆகியோரின் சாட்சியம் அமையாத நிலையில் ம.சா.1ஐ எதிரி மண்வெட்டியால் தாக்கியதாக எழுப்பப்பட்டு

உள்ள குற்றச்சாட்டு மனுதாரர் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. அதே சமயம் ம.சா.1 ஐ எதிரி சாவியால் தாக்கியுள்ளார் என்பது ம.சா.1 முதல் 3 வரையுள்ளவர்களின் சாட்சியத்திலிருந்து சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளதாக தீர்வு காணப்படுகிறது. ஆனால் மேற்படி ஆயுதமான சாவி இதச பிரிவு 324 க்கு உட்பட்ட கொடிய ஆயுதம் என்பதை மனுதாரர் தரப்பில் நிருபிக்கத் தவறியுள்ளதாக தீர்வு காணப்படுகிறது. எனவே மேற்படி சாவி கொடிய ஆயுதம் என்று நிரூபிக்கப்படவில்லை என்றபோதிலும், எதிரி ம.சா.1 ஐ சாவியால் தாக்கியுள்ளது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்கையில் இசத பிரிவு 323 ன் கீழான குற்றச்சாட்டு மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்வு காணப்படுகிறது.

(10.6) மேலும் ம.சா.1 எதிரி கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளபோதிலும் அதனால் அவருக்கு அச்சஉணர்வு ஏற்பட்டதாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. அதனால் எதிரி மீதான இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டு மனுதாரர் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வு காணப்படுகிறது.

11) எதிரி இதச பிரிவு 323-ன் கீழ் குற்றவாளி என்று தீர்வு காணப்பட்டு உள்ளதால் எதியிடம் அவருக்கு வழங்கப்படவுள்ள தண்டனைகள் குறித்து வினவியபோது எதிரி கீழ்க்கண்டவாறு பதில் அளித்தார்.

" அபராதம் மட்டும் போட்டு விடுங்கள்"

12) இவ்வழக்கில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளின் தன்மையையும், எதிரி சாவியால் மனுதாரரின் தலையில் தாக்கியுள்ளதையும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில்கொண்டும் எதிரிக்கு நன்னடத்தை சட்டத்தின் கீழ் எந்த பலனும் கிடைக்கத்தக்கது அல்ல என்றும், எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13) இவ்வழக்கில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளின் தன்மையையும், வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் பொருண்மைகள் ஆகியவற்றையும், எதிரியின் வயது மற்றும் சம்பவமானது குடும்ப சொத்து சம்பமந்தமான பிரச்சனையின் விளைவாக ஏற்பட்டுள்ளதையும் கருத்தில்கொண்டு எதிரிக்கான தண்டனை தீர்மானிக்கப்படுகிறது.

**14) முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 506(2)-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை மேற்படி குற்றச்சாட்டைப் பொறுத்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி இதச பிரிவு 323 ன் கீழ் குற்றவாளி**

**என்று தீர்மானித்து எதிரிக்கு இதச பிரிவு 323-ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.1,000/- அபராதம் விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், கு.வி.மு.ச பிரிவு 248(2)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜுலை திங்கள் 07-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA

Digitally signed by POORNIMA
Date: 2026.07.07 19:02:11 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சிகள்:**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | முத்தையா | அ.சா.1 | புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சி |
| 2. | சாமிநாதன் | அ.சா.2 | கண்ணுற்ற சாட்சி |
| 3. | மாணிக்கம் | அ.சா.3 | கண்ணுற்ற சாட்சி |

**Judicial Form No. 68**

**குற்றமுறையீட்டாளர் தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | போட்டோ மற்றும் சி.டி | 05/04/2022 | ம.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | புகார் மனு | 05/04/2022 | ம.சா.ஆ.2 | அரசு தரப்பு | நகல் |
| 3. | புகார் மனு ரசீது | 05/04/2022 | ம.சா.ஆ.3 | அரசு தரப்பு | நகல் |
| 4. | மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு | 05/04/2022 | ம.சா.ஆ.4 | அரசு தரப்பு | உண்மை நகல் |
| 5. | மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிய புகார் மனு | 05/04/2022 | ம.சா.ஆ.5 | அரசு தரப்பு | உண்மை நகல் |
| 6. | அஞ்சல் ரசீது | 05/04/2022 | ம.சா.ஆ.6 | அரசு தரப்பு | அசல் |
| 7. | அஞ்சல் அட்டை | 05/04/2022 | ம.சா.ஆ.7 | அரசு தரப்பு | அசல் |
| 8. | புகைப்படம் குறுந்தகடு மற்றும் பிரிவு 65B சான்றிதழ் | 06/11/2025 | ம.சா.ஆ.8 | அரசு தரப்பு | அசல் |

**குற்றமுறையீட்டாளர்/புகார்தாரர் தரப்பு சான்றுப் பொருள் - இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி, சான்றுப் பொருள் -இல்லை**

POORNIMA

Digitally signed by POORNIMA
Date: 2026.07.07 19:02:19 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**பின்குறிப்பு:-**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.